செ.வெ.எண்: 85 நாள்:29.08.2016

# பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் சார்பில் பாரம்பரிய உணவுத்திருவிழா மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (3வது மாடி) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நாளை (30.08.2016) காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இவ்விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பாரம்பரிய உணவு கையேட்டினை வெளியிட்டு விழாப்பேருரையாற்றவுள்ளார்.

மேலும் இந்த பாரம்பரிய உணவுத்திருவிழா 2ம் நாள் 31.08.2016 புதன்கிழமையன்றும், 3ம் நாள் 01.09.2016 வியாழக்கிழமையன்றும் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் நடைபெறவுள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த பாரம்பரிய உணவு திருவிழாவில் கலந்து கொண்டு பயனடைய வேண்டும்.

மேற்கண்ட தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**